**தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபை - 2019**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1998 இன் 51 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபை புதிய திருத்தப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்று உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆளுகைத் தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும்

முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் கம்பனியின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க கம்பனி செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 செப்தம்பர் 05 ஆந் திகதி முதல் 60 மாதங்களினுள் செலுத்தி தீர்ப்பனவு செய்யும் அடிப்படையில் செயற்பாட்டு குத்தகை முறையில் சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த இரு வாகனங்களுக்காக 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக செலுத்த வேண்டிய ரூபா 14,681,436 கூட்டுத்தொகையான வரி நீங்கலாக ஆகக் குறைந்த குத்தகைப் பெறுமதி இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 12 இன் 43(ஆ) பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | அரச கணக்கீட்டு நியமத்தின் அடிப்படையில் தேவையான போதிய வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களின் கணக்கீட்டு கொள்கைகளின் கீழ் 3.04 ஆம் இலக்க செயற்பாட்டு குத்தகையின் அடிப்படையில் வாடகை வாகனங்களின் அடிப்படையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபையின் தேசிய புத்தகக் காப்பகத்தை நிறுவுதல், பாதுகாத்தல் மற்றும் நிர்வகித்தல் முக்கிய பணிகளில் ஒன்றாக இருந்தது. அதன்படி, சபையின் வழக்கமான வைப்புத்தொகை, நன்கொடைகள், கொள்வனவுகள், பறிமாற்றல் சேவைகள் போன்றவாறு சபைக்கு கிடைத்திருந்த போதிலும், ரூபா 111,916,057 கூட்டுத்தொகையான கொள்வனவுப் பெறுமதி மாத்திரம் நிதிக்கூற்றுக்களின் புத்தக இருப்பினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், நிறுவனத்தின் பிரதான நோக்கங்களின் பிரகாரம், புத்தகங்களை வகைப்படுத்தல், | நிலையான சொத்துக்கள் கிரயத்தின் அடிப்படையில் கணக்கிடப்படுவதால், கொள்வனவு செய்த சொத்துக்கள் மட்டுமே இருப்பிற்கு கணக்கிடப்படுவதுடன், இலவச வெளியீடுகள் மற்றும் வர்த்தமானி ஆகியவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை.<br><br>ஆயினும்கூட, குழுவின் சேகரிப்பில் எடுக்கப்பட்ட அனைத்து புத்தகங்கள், வர்த்தமானிகள், செய்தித்தாள்கள் போன்றவை மீட்டெடுப்பு எண்ணின் கீழ் முறையாக | சட்டப்பூர்வ மற்றும் பிற பெறுவனவுகளை உரிய முறையில் வகைப்படுத்தல், பெறுமதியை இனங்காணல், கணக்கு வைத்தல் மற்றும் வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| புத்தகங்களின் பெறுமதிகளை இனங்காணல் அல்லது பெறுமதியை இனங்காண நடவடிக்கை எடுக்கப்படாத புத்தகங்கள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் கணக்கீட்டு கொள்கை மற்றும் தேசிய மரபுரிமையொன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ள புத்தகங்கள் தொடர்பில் கொள்கையொன்று நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | ஆவணப்படுத்தப்பட்டு கணினி கட்டமைப்பில் புதுப்பிக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. | |

### 1.5.3 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டினுள் வங்கிக்கு கிடைத்திருந்த ரூபா 296,643 கூட்டுத்தொகையான நேரடி செலவு வைத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தது. | நீண்ட காலமாக சரியாக இனங்காண முடியாத ரூபா 143,397 தொகையான நேரடி வங்கி பற்றுகள் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது. | குறித்த காலப்பகுதிக்குரிய வருமானம் சரியாகக் கண்டறியப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக களஞ்சிய இருப்பு மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் களஞ்சியத்தின் பௌதீக புத்தக இருப்பின் மற்றும் உன்னதமான நூல்களை மீள அச்சிடும் செயற்திட்டத்தின் கீழ் பௌதீக புத்தக இருப்பின் முறையே ரூபா 187,686 மற்றும் ரூபா 1,922,912 ஆன பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்ட போதிலும், அந்த பற்றாக்குறையை இறுதி இருப்பிற்கு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காத காரணத்தால் | களஞ்சிய பதிவேடுகளீல் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் மற்றும் குறைவான கிரயத்தினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு சரியான இருப்பு மீதிகள் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக புத்தக இருப்பின் பெறுமதி ரூபா 2,110,598 இனால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | சபையின் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட புத்தக இருப்பின் பெறுமதி ரூபா 111,916,057 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், பயன்பாட்டு பதிவேட்டின் அடிப்படையில் இந்த புத்தக இருப்பின் கிரயம் ரூபா 45,524,068 ஆக காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் ரூபா 66,391,989 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்ட போதிலும், இந்த வேறுபாட்டினை இனங்கண்டு உரிய திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் கிரயத்தின் அடிப்படையில் கணக்கிடப்படுவதால், கொள்வனவு செய்த சொத்துக்கள் மட்டுமே இருப்பிற்கு கணக்கிடப்படுவதுடன், இலவச வெளியீடுகள் மற்றும் வர்த்தமானி ஆகியவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. | தேசிய நூலகம் மற்றும் ஆவண ஆதாரங்களை முறையாகவும் திறமையாகவும் பராமரித்து கணக்கு வைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிதிப்பிரமாணம் 756, 757 | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 111,916,057 இற்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ள புத்தக இருப்பு மற்றும் தேசிய புத்தகசாலையில் பாதுகாக்கப்பட்ட புத்தக இருப்பு மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | புத்தக சேகரிப்பு சிறிய தொகுப்பாக இருப்பதாலும், வாசகர் சேவையை தொடர்ந்து வழங்க வேண்டியதாலும், வருடாந்திர கணக்கெடுப்பு ஒரே நேரத்தில் நடத்தப்படாமல், 2023 ஆம் ஆண்டு முதல் கணக்கெடுப்பை கட்டம் கட்டமாக நடத்த உள்ளக திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத் தின் 16(1) ஆம் பிரிவு | 2018 ஆம் ஆண்டு முதல் Quick Book கணினி மென்பொருளின் கீழ் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த சபையின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான பேரேட்டுப் பதிவுகள் தொடர்ச்சியாகவும், கால அடிப்படையில் பதிவு செய்யப்படுவதில்லை என்பதுடன், 2022 யூலை 20 ஆந் திகதி வரையிலும் 2020 சனவரி மாதத்தின் கொடுக்கல் வாங்கல்கள் கணினி மென்பொருளினுள் உள்ளடக்கப்படுகின்றமை கணக்காய்வுக்கு அவதானிக்கப்பட்டது. | கோவிட் தொற்றுநோய் நிலைமையின் கீழ் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் இயல்பான பணிகளைச் செய்ய முடியவில்லை. இருப்பினும், 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன, மேலும் 2022 ஆம் ஆண்டின் இறுதிக்குள் நிதி பதிவுகளை கணினி மூலம் புதுப்பித்த நிலையில் வைத்திருக்க முடியும். | கணக்காய்வு அதிகாரச்சட்டத்தி ன் ஏற்பாடுகளின பிரகாரம் செய்யப்பட வேண்டும். |
| (இ) | 1998 இன் 51 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் ஆவணப்படுத்தல் சேவைகள் அதிகாரச்சட்டம் | | | |
| | (i) 12(2)(அ), (ஆ) மற்றும் (உ) பிரிவுகள் | (i) பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு, கையகப்படுத்தல் மற்றும் நூலியல் கட்டுப்பாட்டு பிரிவுகளின் செயன்முன்னேற்ற அறிக்கைகளில் நூலக | புதிய வடிவத்தின்படி அந்தத் துறைகளின் மாதாந்திர முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரிக்கும் பணி செப்டம்பர் 2022 முதல் தொடங்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட பிரிவுகளில் | சட்டத்தின்படி, சபைக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளை திறமையாக நிறைவேற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் ஆவணப்படுத்தல் சேவைகளின் காப்பகமொன்றை வழங்குதல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆவணப் பொருட்களின் தொகுப்பை நிறுவுதல், மேம்படுத்துதல், பராமரித்தல் மற்றும் பாதுகாப்பு துறையில் சபைக்கு ஒதுக்கப்பட்ட பணிகளின் செயல்திறனில் முன்னேற்றம் பிரதிபலிக்கவில்லை என்பதுடன், அந்த துறைகளில் உள்ள மொத்த 40521 அலகுகள் கையிருப்பில் காணப்பட்டன. | நிறுத்தப்பட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. | |
| (ii) | 2018 ஆம் ஆண்டு தேசிய நூலகக் கட்டிடத்தின் சீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதன் காரணமாக, அன்றிலிருந்து பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்புத் துறையின் ரூபா 3,660,547 கிரயமான உபகரணங்களுடனான இரசாயனக் கூடமொன்றை அமைந்திருந்த இடத்திலிருந்து அகற்றப்பட்டமையால் அதன் பணிகள் 2022 செப்தம்பர் 30 ஆந் திகதி வரையிலும் நிறுத்தப்பட்டன. இதனால் 04 வருடங்களாக ஆய்வு கூடத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த புத்தகப் பாதுகாப்புப் பணிகளை | நவீன பாதுகாப்பு ஆய்வகத்தை நிறுவ, தற்போதுள்ள ஆய்வகத்தை அதன் இடத்திலிருந்து தற்காலிகமாக அகற்ற வேண்டியிருந்தது.<br><br>நூலகத்தின் பாதுகாப்புப் பணிகள் தற்போதுள்ள உபகரணங்களைக் கொண்டு பராமரிக்கப்பட்டாலும், பயிற்சி பெற்ற பணியாளர்கள் பற்றாக்குறையும் உள்ளது. தகுந்த பணியாளர்கள் மற்றும் முறையான ஆய்வு கூடம் ஆட்சேர்ப்பு நிறுவப்பட்ட பிறகு, இந்த வேலையை திறம்பட மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. | புத்தகங்களை பாதுகாக்க ஆய்வகம் அவசியம் என்பதால் நவீனமயமாக்கும் பணியை துரிதப்படுத்த வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போதுமான அளவில் மேற்கொள்ள முடியவில்லை. | | |
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் | நிதியாண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 738 நாள் தாமதத்தின் பின்னர் 2022 மார்ச் 08 ஆந் திகதியே கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கோவிட் தொற்றுநோய் நிலைமையின் கீழ் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் இயல்பான பணிகளைச் செய்ய முடியவில்லை. 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் குறைவான பதவியணியுடன் கால தாமதத்துடனேனும் சமர்ப்பித்தமை வெற்றியாகும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 376,878,130 கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பில் நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | புதுப்பிக்கப்பட்ட நிலையான சொத்து பதிவேட்டை பராமரிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. | புதுப்பிக்கப்பட்ட நிலையான சொத்து பதிவேட்டை பராமரிக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | 2012 மே 22 ஆந் திகதி வெளியிடப்பட்ட பொது முயற்சிகள் தொடர்பான குழுவின் தீர்மானம் | சபையின் முன்னாள் பணிப்பாளரின் 2010 ஆம் ஆண்டின் போது சட்டரீதியற்ற விதத்தில் சம்பளமாக கூடுதலாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 247,500 தொகை மீள அறவிடப்பட்ட பொது முயற்சிகள் குழுவிற்கு அறிக்கையிடுமாறு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், 2022 யூலை 15 ஆந் திகதி வரையிலும் அந்த கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டமா அதிபர் திணைக்களத்திடம் தேவையான அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொண்ட பின்னர், காலதாமதம் ஏற்படுவதால் கட்டணம் வசூலிக்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கோரிக்கையின் படி, உயர்கல்வி அமைச்சின் செயலாளருக்கு, ஓராண்டுக்குள் தவணை முறையில் தொகையை சபைக்கு செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. | பொது முயற்சிகள் குழுவின் முடிவை அமுல்படுத்த வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 11,465,100 ஆன பற்றாக்குறையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய வருடத்தின் பற்றாக்குறை ரூபா 15,513,944 ஆகும். அதன் பிரகாரம் நிதிப் பெறுபேறுகளின் ரூபா 4,048,844 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் நிதிப் பெறுபேறுகளின் அதிகரிப்பிற்கு நிர்வாகச் செலவினம் ரூபா 3,147,744 இனால் குறைவடைந்தமை மற்றும் மீளாய்வாண்டின் மீண்டெழும் தன்மையிலான அரச மூலதன மானியங்கள் ரூபா 2,162,277 இனால் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையினால் 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலும் அச்சிடப்பட்டிருந்த ரூபா 2,084,167 பெறுமதியான 8,053 சபையின் வெளியீடுகளின் இருப்பு 2022 ஒக்தோபர் 03 ஆந் திகதி வரையிலும் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் வெளியீடுகளின் எஞ்சிய இருப்பைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>எதிர்காலத்தில், இலங்கை பத்திரிகைகளின் நூல் பட்டியல் மற்றும் தொடர்கள் பல்வேறு செயலமர்வுகள் மற்றும் மாநாடுகளில் கற்றல் பொருட்களாக நன்கொடையாக வழங்கப்பட உள்ளன மற்றும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் அறிஞர்களுக்கு வழங்கப்பட உள்ளன. | தேவையை உணர்ந்து அச்சுப் பணிகளை மேற்கொண்டு, இருக்கும் புத்தகங்களை திறம்பட பயன்படுத்த வேண்டும். |